**வாக்குமூலம்**
**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,**
**மேட்டூர்,**
**தேதி: 11.08.2025**
**OS. No. 164/2023**
**வழக்கு சாட்சி PW.1–தனம், க/பெ.பழனியப்பன்**

(சாட்சி சத்தியப்பிரமாணம் செய்து பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார் )

**பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :**

1) எனக்கு மொத்தம் 4 பிள்ளைகள், அவர்கள் பெயர்கள் அலமேலு, கோவிந்தராஜ், பழனியம்மாள், சாந்தி ஆகும். அவர்களில் கோவிந்தராஜ் இறந்து 20 வருடங்கள் ஆகிறது. சாந்தி திருமணம் ஆகாமல் இறந்துவிட்டார். கோவிந்தராஜ் அவர்களுக்கு திருமணம் ஆனது, ஆனால் அவருக்கு குழந்தைகள் இல்லை. கோவிந்தராஜின் மனைவி பெயர் தீபா ஆகும். கோவிந்தராஜிக்கும், அவரது மனைவிக்கும் விவாகரத்து ஆகிவிட்டது. தற்போது அலமேலு மற்றும் பழனியம்மாள் மட்டும் உயிருடன் உள்ளனர், அவர்களிடம் எனக்கு பேச்சுவார்த்தை இல்லை. என் கணவர் பழனியப்பன் 2 வருடங்களுக்கு முன்பு இறந்துவிட்டார். நானும், என் கணவரும் 20 வருடங்களுக்கு முன்பிலிருந்தே தனித்தனியாகத்தான் வாழ்ந்து வந்தோம். நான் ஒரு மகளை விட்டு விட்டு அலமேலு மீது மட்டும் வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். அலமேலுவின் கணவர் உயிருடன் உள்ளாரா என்றால் உள்ளார். அலமேலுவிற்கு மொத்தம் 4 பிள்ளைகள் அதில் ஒரு பிள்ளை இறந்துவிட்டார்.

2) பிரதிவாதிக்கும், எனக்கும் தாவா சொத்தை தவிர மற்ற சொத்துக்களும் உள்ளது. பிரதிவாதியும் தாவா சொத்தில் தான் என்னிடம் பிரச்சனை செய்து கொண்டு உள்ளார். சுமார் 20 வருடங்களாக பிரதிவாதியும் தாவா சொத்தில் என்னுடன் சேர்ந்து அனுபவத்தில் உள்ளார். பிரதிவாதியும், அவர்களது குடும்பத்தாருடன் தாவா வீட்டில்தான் உள்ளார்கள் என்றால் சரிதான். தாவா சொத்து நானே சம்பாதித்து வாங்கிய சொத்தாகும். தாவா சொத்தை நானே சம்பாதித்து வாங்கியதாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. தாவா சொத்திற்கு என் பெயரில் பட்டா எதுவும் உள்ளதா என்றால் இல்லை. தாவா சொத்தை பிரதிவாதி தான் வாங்கியுள்ளார் என்றும், என்னுடைய

கணவரிடமிருந்து நான் தனியாக வந்துவிட்டதால் எனக்கு ஆதரவாக இருக்கவேண்டி என்னுடைய பெயரும் கிரையத்தில் சேர்க்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. தாவா வீட்டிற்கு எதிரே தென்வடலாக ஒரு வீதி செல்கிறது என்றால் சரிதான். தாவா சொத்தில் நான் குடியிருக்கும் வீடு தனியாகவும், பிரதிவாதி குடியிருக்கும் வீடு தனியாகவும் அமைந்துள்ளது என்றும், இருவரும் அந்தந்த வீட்டில் தனியாகத்தான் அனுபவத்தில் உள்ளோம் என்றால் சரிதான். என்னுடைய வீட்டிலிருந்து வெளியே வந்தாலே வீதிக்கு வந்துவிடலாம் என்றால் சரிதான். தாவா சொத்தில் என்னுடைய வீட்டிற்கு வீதியிலிருந்து நான் தனியாக வழியில் வந்து செல்லலாம் என்றால் சரிதான். அதேபோல் பிரதிவாதிகளும் அவர்களுடைய வீட்டிற்கு தனியாக வழியில் வந்து செல்லலாம் என்றால் சரிதான். எனக்கு மேச்சேரியில் தனியாக 10 சென்ட் நிலம் உள்ளது என்றால் சரிதான், அது என் தாயார் எனக்கு வழங்கியது, என் மகன் இறந்தபிறகு என் தாயாருக்கே திருப்பி கொடுத்துவிட்டோம். என் சகோதரர் ஜெயபாலுவின் மகன் ராஜேந்திரன் உயிருடன் உள்ளார் என்றால் சரிதான். ராஜேந்திரன் மற்றும் அவரது அண்ணன் சக்திவேல் தான் மேற்கண்ட 10 சென்ட் நிலத்தில் அனுபவத்தில் உள்ளார்கள்.

3) ராஜேந்திரனுக்கும், பிரதிவாதிக்கும் பேச்சுவார்த்தை இல்லை என்றால் சரிதான். ராஜேந்திரன் தான் என்னை தூண்டிவிட்டு, பிரதிவாதியின் மீது வழக்கு தாக்கல் செய்ய வைத்துள்ளார் என்றால் சரியல்ல. தாவா சொத்தில் கூட்டு அனுபவத்திலுள்ளதாக சொல்வது தவறு என்றும், நாங்கள் அவரவர்கள் தனியாக அவரவர்கள் வீட்டில் அனுபவத்தில் உள்ளோம் என்றால் சரியல்ல. பிரதிவாதிக்கு தாவா சொத்தில் அமைந்துள்ள அவர்களது வீட்டை தவிர வேறு வீடு இல்லை என்றும், நான் வழக்கிற்காக உள்ளதாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. நான் தான் பிரதிவாதியை தொந்தரவு செய்து வருகிறேன் என்றும், பிரதிவாதி எங்கள் அனுபவத்தில் எந்த தொந்தரவும் செய்யவில்லை என்றால் சரியல்ல. எந்த தேதியில் பிரதிவாதி தொந்தரவு செய்தார் என்றால் எனக்கு தெரியவில்லை. வழக்கில் சொல்லியுள்ளேன். சுமார் 8 வருடத்திற்கு முன்பு பிரச்சனை செய்தார்கள்.

4) பிரதிவாதி பிரச்சனை செய்ததது தொடர்பாக காவல்நிலையத்தில் புகார் கொடுத்துள்ளேனா என்றால் கொடுத்துள்ளேன். அதை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. நான் அவ்வாறு உண்மையாக புகார் கொடுத்திருந்தால் அந்த புகார் மனுவை தாக்கல் செய்திருப்பேன் என்றும், பிரதிவாதியிடம் பணத்தை பறிக்கவேண்டும் என்று என் அண்ணன் மகன்களுடன் சேர்ந்து பொய்யாக இந்த வழக்கை தாக்கல் செய்து, பிரதிவாதியிடம் பிரச்சனை செய்து வருகிறேன் என்றால் சரியல்ல. என் வழக்கு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல. தாவா சொத்து அறிவழகன் என்பவரிடமிருந்து கிரையம் பெற்றோம். தாவா சொத்தில் நான் அனுபவத்திலுள்ளதற்கு ஆதரவாக ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை.

ஒம்/–திரு. M.செல்வம்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேட்டுர்.